மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில்

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் நிறைவு உரை

(18.9.2006)

* * * * * * * * *

**காலையிலிருந்து பல்வேறு விஷயங்களைப் பற்றி தீர விவாதத்தை நடத்தி நிறைவு செய்திருக்கின்றோம். ஆனால் இந்த விவாதத்தினுடைய விளைவுகள் நிறைவாக, மன நிறைவாக அமைய வேண்டுமென்பதற்காக நான் உங்களுக்கு விடுக்கின்ற வேண்டுகோள், காலையிலே என்னுடைய துவக்க உரையிலே குறிப்பிட்டதைப் போல, எத்தனை பிரச்சினைகள், எத்தகைய பிரச்சினைகள் இருந்தாலுங்கூட, அவற்றையெல்லாம் ஒதுக்கி வைத்து விட்டு, அரசின் கடமைகளை ஆற்றுகின்ற தூதுவர்கள் நாம் என்ற அந்த உணர்வோடு அயராது பணியாற்ற வேண்டுமென்று உங்களை யெல்லாம் நான் கேட்டுக் கொள்கிறேன்.**

**நம் முன்னால் இருக்கின்ற பல்வேறு திட்டங்கள், அந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய வழிமுறைகள் – இவைகளை யெல்லாம் விவாதித் திருக்கிறோம். விவாதித்தோம், கலைந்தோம் என்ற அளவோடு நின்று விடா மல் எடுத்த முடிவுகளை விவாதிக்கும்போது சொல்லிய யோசனைகளை நாமும் பின்பற்றி வெற்றிகரமாக இவற்றை ஆக்க வேண்டுமென்ற அந்த உணர்வோடு பணியாற்ற வேண்டுமென்று உங்களை யெல்லாம் நான் கேட்டுக் கொள்கிறேன்.**

**ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்கின்ற வாய்ப்பு எனக்கு ஏற்பட்டு, என்னோடு சேர்ந்து மக்களுக்குப் பணியாற்றுகின்ற வாய்ப்பு உங்களுக்கும் ஏற்பட்டிருக்கின்ற இந்தக் காலக் கட்டத்தில் இந்த வாய்ப்பை முழுமையாக, வாய்மையோடு எந்த மக்கள் நம்மை நம்பி இந்தப் பொறுப்பிலே உட்கார வைத்திருக்கிறார்களோ, அவர்களுக்கு அணுவளவும் ஐயப்பாடோ,**

அல்லது  அதிருப்தியோ ஏற்படாத வண்ணம் நாம் நடந்து கொள்ள வேண்டும் என்பதை  கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

ஓர் அரசு, அரசின் தலைமை  எவ்வாறு  இருக்கிறதோ அப்படித் தான் அரசு அதிகாரிகளும், அரசு அலுவலாளர்களும்,  அவர்களின் கீழே இருக் கின்ற மற்ற மற்றவர்களும் இருக்க முடியும் என்பது தெளிவான உண்மை. நான் இந்த நேரத்தில் உங்களை யெல்லாம் வைத்துக் கொண்டு  அரசியல் பேசுவதாகக் கருதக் கூடாது.  அரசியல் என்பது நம்முடைய வாழ் விலே ஒரு அங்கம்.  அது ஏதோ தனிப்பட்ட, விவாதிக்கத் தகாத ஒன்றல்ல.  வாழ்வுக்கு இலக்கணம் வகுத்த வள்ளுவர், எழுதிய திருக்குறளில் ‘‘அரசியல்’’ என்ற ஒரு பகுதியே இருப்பதை நீங்கள் யாரும் மறந்து விட முடியாது.  அந்த அரசியல் எப்படியிருக்க வேண்டும், அதிலே ஈடுபடு கிறவர்கள் எவ்வளவு கண்ணியத்தோடு உலாவ வேண்டும், இயங்க வேண்டும், அரசு நடத்துகின்றவர்கள் எப்படிப்பட்ட உணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும், இன்னும் கூட வள்ளுவர் சொல்கிறார், ‘‘கடிதோச்சி மெல்ல எறிக’’ என்று, கடிதோச்சவே கூடாது என்று சொல்லவில்லை, கடிதோச்சுவது அடுத்து மெல்ல எறிவதற்காகத் தான் என்கின்ற அளவிற்கு அவர் சொல்வதற்குக் காரணமே, கடிதோச்சுதல் இருந்தால் தான், ஓர் அரசை அமைதியாக நடத்த முடியும் என்பதை அவர் கருதிய காரணத்தால் தான் அவ்வாறு சொன்னார். அப்படி நீங்கள் நடந்து கொள்ள வேண்டுமென்று உங்களை யெல்லாம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த கால அரசிலே பொறுப்பு வகித்தவர்கள் பலர் இங்கே இருக் கிறீர்கள்.  உங்களுக்குத் தெரியும், அப்படிப்பட்டவர்கள் யார் என்பதை நான் அறிவேன் என்பதும் உங்களுக்குத் தெரியும்.  ஆனால் அவர்களை யெல்லாம் அறவே வீட்டிற்கு அனுப்பி விட வேண்டுமென்ற அளவிற்கு பழி வாங்குகின்ற மனப்பான்மை எனக்கும் இல்லை, என்னுடைய அமைச்சரவையிலே இருக்

கின்றவர்களுக்கும் இல்லை, அப்படியெல்லாம் எங்களை ஆளாக்கிய அறிஞர் அண்ணா அவர்கள் எங்களுக்குக் கற்பிக்கவும் இல்லை.

ஆனால் ஒன்றிரண்டு மாற்றங்களை, ஒன்றிரண்டு காரியங்களை நாங்கள் செய்தே தீர வேண்டிய அவசியம் எங்களுக்காக அல்ல, மக்களுக்காக, நாட்டிற்காக, இந்த அரசு ஒழுங்காக நடைபெறவேண்டும் என்பதற்காக நடத்தவேண்டியிருக்கின்றது. நாங்கள் 1967ஆம் ஆண்டு அண்ணா தலைமையிலே அமைச்சர்களாகப் பொறுப்பேற்ற போது, எங்களை யெல்லாம் உட்கார வைத்துக் கொண்டு அவர் சொன்னார். கோப்புகளைப் பார்க்கத் தவறாதீர்கள், நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்று காலந்தாழ்த்தி விடுவீர்களேயானால், நீங்கள் ஒரு மணி நேரமோ அல்லது ஒரு நாளோ அந்தக் கோப்புகளைப் பார்க்க மறந்து அல்லது அலட்சியப்படுத்தி வேறு வேலை பார்ப்பீர்களேயானால், அதனால் நூறு குடும்பங்களின் வாழ்வு பாதிக்கப்படும் என்பதை மறந்து விடாதீர்கள் என்று எங்களுக்கு அண்ணா அவர்கள் சொன்ன முதல் அறிவுரை ஆகும் அது. அதற்குப் பிறகு தனியாகவும் எங்களிடம் அவர் சொல்லியிருக்கிறார். கோப்புகளைப் பார்க்கும்போது, “Back File” பார்ப்பது முக்கியம். உங்களுடைய செயலாளர் அதனைக் காட்டாமல் கையெழுத்து போட வேண்டிய இடத்தை மாத்திரம் காட்டினால், அந்த இடத்திலே கையெழுத்தைப் போட்டுவிட்டு, முடிந்தது இந்தக் கோப்பு என்று உற்சாகமாக வேறு கோப்பைத் தேட ஆரம்பித்து விடாதீர்கள். ஒவ்வொரு கோப்பிலும் “Back File” என்று ஒன்றிருக்கிறது. அந்தக் கோப்பின் ஆரம்பம் எப்படி என்பது அதிலே தான் இருக்கும். அதை நீங்கள் படித்தால் தான், நல்ல முடிவினை அந்தக் கோப்பிலே நீங்கள் எடுக்க முடியும் என்றும் அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பையேற்ற அந்தக் காலக் கட்டத்திலேயே சொன்னார்கள்.

அதே செய்தியை நான் ஆட்சிப் பொறுப்புக்கு வந்து பொதுப்பணித் துறை அமைச்சராக அண்ணா அவர்களால் நியமிக்கப்பட்ட அந்தக் காலக் கட்டத்தில் மறைந்த சி.சுப்பிரமணியம் அவர்களைச் சந்திக்க நேர்ந்தது. அப்போது அவரும் அதையே சொன்னார். "பைல்'' பார்க்கும்போது ''Back File" முக்கியம், அதை நீங்களும் செய்யுங்கள், உங்கள் நண்பர்களுக்கும் சொல்லுங்கள் என்றார்.

ஆகவே சில நேரங்களிலே நம்முடைய செயலாளர்கள், நம்பிக்கைக்கு உரியவர்களாக, சொன்ன இடத்திலே கையெழுத்து போடலாம் என்ற அளவிற்கு இருப்பார்களேயானால், அப்போது "Back File''ஐத் தேட வேண்டிய அவசியம் கூட இல்லை. இருந்தாலுங்கூட "Back File'' முக்கியம் என்பதை மறந்து விடக் கூடாது. கோப்புகளையே பார்க்காதவர்களைப் பற்றிக் கவலையில்லை. பார்க்கின்றவர்களுக்குச் சொல்கிறேன். எனவே அதுவும் மிகவும் முக்கியம்.

நான் வேறு இடத்திலே சொல்ல முடியாது, இந்த இடத்திலே தான் சொல்ல முடியும். உங்களைப் போன்ற பெரிய பொறுப்புகளிலே உள்ள செயலாளர்கள், அதிகாரிகள், மாவட்டங்களைப் பரிபாலிக்கின்ற பொறுப்பிலே உள்ள மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோர் மத்தியிலே தான் சொல்ல வேண்டும். தயவுசெய்து அரசியல் என்று நீங்கள் கருதிக் கொள்ளக் கூடாது. ஏனென்றால் நான் பொறுப்பேற்ற இந்தக் காலக் கட்டத்தில் முதல் வாரமே 1112 கோப்புகள், முன்னாள் முதலமைச்சருடைய கையெழுத்து இல்லாத கோப்புகளை நான் காண நேர்ந்தது. பொய் அல்ல, ஜோடனை அல்ல. உண்மைக்கு மாறான செய்தி அல்ல. அப்படிப்பட்ட ஒரு துர்ப்பாக்கியம் எனக்கு ஏற்பட்டது. 1112 கோப்புகளின் எண்ணிக்கை அத்துடன் நிற்கவில்லை. நான் இந்தச் செய்தியை வெளியிட்ட பிறகு மிச்சம் உள்ள நாட்களில் ஒவ்வொரு நாளும் நான் கோப்பு பார்க்கும்போதெல்லாம் இரண்டு அல்லது மூன்று கோப்புகள்

முன்பிருந்த ஆட்சியாளர்களால், நிதியமைச்சரால் அல்லது பொதுப்பணித் துறை அமைச்சரால் பார்க்கப்பட்டு முதலமைச்சரால் பார்க்கப்படாத கோப்புகள் தான் வந்துகொண்டே இருக் கின்றன. நிதியமைச்சர் வரையிலே கோப்பு வந்திருக்கும், தலைமைச் செயலாளர் வரையிலே கோப்பு வந்திருக்கும், அவர்களின் கையெழுத்தோடு கோப்பு முடிந்திருக்கும். தலைமைச் செயலாளராக இருந்த நாராயணனாக இருந்தாலும் சரி, அல்லது லட்சுமி பிரனேஷ் ஆனாலும் சரி, அவர்களின் கையெழுத்தோடு முடிந்த கோப்புகள் பல. இவற்றை எதற்காகச் சொல்கிறேன் என்றால், அப்படி பொறுப்பற்ற முறையிலே ஒரு காரியம் நடை பெற்றிருக்கின்றது, தமிழ்நாட்டிலே ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்களால் நடைபெற்றிருக்கின்றது.

பல கோப்புகளில், இன்னும் சொல்லப் போனால் இங்கே விவாதித்தோமே, காலையிலிருந்து, சுனாமிக்காக வந்த நிதி எவ்வளவு என்று, ஏறத்தாழ 2000 கோடி ரூபாய் அளவிற்கு செலவழிக்க தலைமைச் செயலாளர் நாராயணன் அவர்களின் மாத்திரம் தான் தேவைப்பட்டிருக்கின்றது. முதல் அமைச்சரின் கையெழுத்து இல்லாமலேயே 2000 கோடி ரூபாய் வரவு செலவு நடைபெற்றிருக்கின்றது. இப்படி பல கோப்புகள் நம்மிடையே உலா வந்தன. இன்றைக்கும் அவைகளில் பல தேங்கிக் கிடக்கின்றன. அவைகளை யெல்லாம் ஒவ்வொரு நாளும் பார்த்துப் பார்த்து மனம் புழுங்கி, இப்படி நடை பெற்றதா நாட்டின் நிர்வாகம் என்ற கவலையோடு நான் அவைகளில் கையெழுத்திட்டு முடித்திருக்கிறேன். பல விஷயங்கள் அப்படி.

ஒரு அதிகாரி குற்றஞ்சாட்டப்படுகிறார், அந்தக் குற்றச்சாட்டை விசாரிக்கிறார்கள். விசாரணையின் முடிவில் அவர் குற்றவாளி அல்ல, எந்தவிதமான புகாரும் நிரூபிக்கப்படவில்லை என்று கோப்பினை அனுப்புகிறார்கள். அந்தக் கோப்பு தலைமைச் செயலாளருக்கு வருகிறது. அவர் அதை ஏற்றுக் கொண்டு, அடுத்த நிலையிலே உள்ள சம்பந்தப்பட்ட

அமைச்சருக்கு அனுப்புகிறார். அமைச்சர் அதை ஏற்றுக் கொண்டு, முதல் அமைச்சருக்கு அனுப்புகிறார். அவர் கையெழுத்திடாத காரணத்தால், ஐந்தாண்டு காலமாக புகார் கூறப்பட்ட அதிகாரி, எந்தவிதமான மேல் பொறுப்புக்கும் வர முடியாமல் தவியாய் தவித்து, தற்போது நான் வந்து கையெழுத்திட்ட பிறகு அவருக்கு கதி மோட்சம் கிடைக்கிறது என்றால் இது போன்றதொரு நிலைமை ஒரு குடும்பத்திற்கு அல்ல, பல குடும்பங்களுக்கு ஏற்பட்டுள்ளதே; நியாயமா ?

ஒரு தாசில்தார் மணல் லாரியைத் தடுத்தார் என்ற காரணத்திற்காக லாரியையே அவர் மீது ஏற்றிக் கொன்று விடுகிறார்கள். அந்த லாரி ஏறிய காரணத்தால் அவர் அந்த இடத்திலேயே மாண்டதால், அதைப் பார்த்து வருந்திய திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர், இறந்த அதிகாரி மீது பரிதாபம் கொண்டு, அவருடைய விதவை மனைவி எப்படி வாழ்வார் என்று, அவருடைய பெண்ணுக்கு ஒரு அரசு வேலை கொடுக்க வேண்டு மென்று அரசுக்குப் பரிந்துரை செய்கிறார். இப்படி ஒருவர் கடமையைச் செய்யும்போது கொல்லப்பட்டிருக்கிறார். அந்த அதிகாரியின் வாரிசுக்கு அரசு வேலை கொடுக்க வேண்டுமென்று கலெக்டர் எழுதுகிறார். ஆனால் அந்தக் கோப்பு கிட்டத்தட்ட நான்காண்டு காலமாக கிடப்பிலேயே கிடந்து அதைப் பற்றி யாரும் கவலைப்படாமல், நான் தற்போது முதல் அமைச்சராகப் பொறுப் பேற்ற பிறகு கையெழுத்திட்டு, அந்தக் குடும்பத்திற்கு வாழ்வளித்திருக் கிறேன், அந்தக் குடும்பத்தின் விளக்கையேற்றி வைக்க இப்போது தான் சந்தர்ப்பம் வாய்த்தது. இப்படி ஒன்றல்ல, இரண்டல்ல, பல அரசியல் சார்பான விஷயங்கள், கொள்கை ரீதியாக எடுக்கப்பட வேண்டிய முடிவுகள். மனிதாபி மானத்தோடு செய்யப்பட வேண்டிய காரியங்கள்.

21 பேர் பத்திரிகை எழுத்தாளர்கள், செய்தியாளர்கள் இறந்திருக்கிறார் கள். அப்படி இறந்த பத்திரிகையாளர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் என்றும்,

அதற்குப் பிறகு இரண்டு இலட்சம் ரூபாய் என்றும் நிதி வழங்க வேண்டுமென்று உத்தரவுகள் போடப்பட்டுள்ளன. நாங்கள் ஆட்சியிலே இருந்த வரை அந்த உத்தரவுகள் நிறைவேற்றப்பட்டு, நடைமுறையிலே இருந்தன. அதற்குப் பிறகு கடந்த ஐந்தாண்டு காலத்தில் அந்த உத்தரவுகள் நாதியற்றுப் போயின. அந்த உத்தரவுகளை நிறைவேற்ற ஆள் இல்லை, நிறைவேற்றுங்கள் என்று சொல்லவும் ஆள் இல்லை. அதற்கு கையெழுத்து போட யாரும் முன்வரவில்லை. அதனால் அந்த 20 பேருக்கு இப்போது தான் நாங்கள் பொறுப்பேற்ற பிறகு தான் கையெழுத்திட்டு அந்தக் கோப்புகளை நகர விட்டு, அவர்களுடைய குடும்பங்களை வாழ வைக்க முடிந்தது என்பதை நான் சொல்வதற்குக் காரணம், இதெல்லாம் உங்களிடத்திலே ஏதோவொரு விஷயத்தைச் சொல்ல வேண்டும், குறை கூற வேண்டும் என்பதற்காக அல்ல. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு துறையிலும் கூட கோப்புகள் வந்து கொண்டு தான் இருக்கின்றன. அரசு எவ்வழியோ, அதிகாரிகளும் அவ்வழி என்று இல்லாமல், நாமாவது அந்தக் கோப்புகளை உடனுக்குடன் பார்க்கின்ற அந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டும், அந்தப் பொறுப்பை உணர வேண்டுமென்று உங்களை யெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

கோப்புகளைப் பார்த்து, கடமைகளை நிறைவேற்றி, உரிய நேரத்தில் கடமைகளை நிறைவேற்றி, நான் காலையிலே எடுத்துக் காட்டியதைப் போல மக்களைச் சந்திக்கின்ற வாய்ப்பினை அடிக்கடி அதிகார வர்க்கத்தினர் ஏற்படுத்திக் கொண்டு, கோட்டையிலே இருக்கின்ற அதிகாரிகள், மாவட்டங் களில் இருக்கின்ற அதிகாரிகளோடு அடிக்கடி தொடர்பு கொண்டு, மாவட்டங் களில் இருக்கின்ற அதிகாரிகள், அவர்கள் கலெக்டர்களாக இருந்தாலும், அவர்களுக்கு அடுத்து இருக்கின்ற டி.ஆர்.ஓ. போன்ற அதிகாரிகளாக இருந் தாலும், அவர்கள் எல்லாம் தாங்கள் ஈடுபட்டிருக்கின்ற பொது வாழ்க்கையிலே அரசின் கடமைகளிலே தக்கக் கவனத்தைச் செலுத்தி, தொடர்பு கொள்ள

வேண்டியவர்களைத் தொடர்பு கொண்டு, யாரையும் அலட்சியப்படுத்தாமல், யாரையும் பொருட்படுத்த மாட்டோம் என்ற அளவிற்கு நடந்து கொள்ளாமல், அனைவரையும் சந்திக்கின்ற பொறுப்பினையும் ஏற்று, சந்திக்க வருகின்றவர்களையும் மரியாதையோடு நடத்தி எல்லாவிதமான நற்காரியங்களையும் நீங்கள் செய்திட வேண்டும். காலை முதல் இது வரை யிலே நாம் ஆய்ந்திருக்கின்ற, நாம் பரிசீலித்திருக்கின்ற, நாம் சிந்தித்திருக் கின்ற செயல்பாடுகளை யெல்லாம் சிறப்புற நடத்துவதற்கு உங்களை நீங்கள் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். அது ஒன்று தான் நீங்கள் எனக்கு நன்றி காட்ட வேண்டுமென்று எண்ணினால் காட்டுகின்ற நன்றியாகும், நாட்டிற்குக் காட்ட வேண்டிய நன்றியாகும் என்று கூறி இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.